ஏராளமான குடிசைகள் இருக்கிற காரணத்தாலே, மிகக் குறைந்த அளவுள்ள அந்த நிலத்திலே அத்தனை பேருக்கும் அங்கேயே எல்லாவிதமான வசதி வாய்ப்புகளையும் உருவாக்கித் தர இயலாத சூழ்நிலை இருக்கிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

(இ) கோவை மாவட்டம் குறிச்சி மற்றும் குனியமுத்தூர் பஞ்சாயத்துக்களில் சில பகுதிகள் சிறுவாணி குடிநீர்ப் பற்றாக்குறையால் பாதிக்கப்பட்டுள்ளது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்த கவன ஈர்ப்பு. திரு. கே.பி ராஜு அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

திரு. கே.பி. ராஜு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கோயம்புத்தூர் மாவட்டம் குறிச்சி பஞ்சாயத்திற்கு உட்பட்ட சுந்தராபுரம், எல்.ஐ.சி. காலனி, ஆத்துப்பாலம், ஈச்சநாரி, போத்தனூர், குனியமுத்தூர் பஞ்சாயத்துக்கு உட்பட்ட குனியமுத்தூர், சுண்டக்காமுத்தூர், பி.கே.புதூர், சுகுணாபுரம், இடையர்பாளையம் ஆகிய பகுதிகளில் சிறுவாணி குடிநீர் பற்றாக்குறை காரணமாக மக்கள் அவதிப்படுவது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது:

அறிக்கை

சிறுவாணி கூட்டுக் குடிநீர்த் திட்டப் பணிகளுக்கு தமிழக அரசு 26-11-76 ஆம் தேதி 16.16 கோடி ரூபாய்க்கு ஒப்புதல் அளித்தது. இத்திட்டம் 1976-77 ஆண்டு செயலாக்கத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு 21.96 கோடி ரூபாய் செலவில் 1982-83-ல் நிறைவேற்றப்பட்டு மக்களின் பயனுக்கு கொண்டு வரப்பட்டது.

இத்திட்டத்தின் கீழ் பின்வரும் குடியிருப்புகள் பயன்பெறும்:

1. கோவை மாநகராட்சி மற்றும் தொழிற்சாலைகள்.

2. கோவையைச் சுற்றியுள்ள இணைக்கப்பட்ட பகுதிகள்.

(அ) சிங்காநல்லூர்

(ஆ) கணபதி

(இ) குமாரபாளையம்

(ஈ) சங்கனூர்

(உ) தெலுங்குபாளையம்

(ஊ) பாலரங்கநாதபுரம்

(எ) கோயமுத்தூர் ஊரகப் பகுதி

3. தனிப்பட்ட நகரங்கள் (Satelite Towns)

(அ) கவுண்டன் பாளையம்

(ஆ) சூளூர்

(இ) குறிச்சி

(ஈ) குனியமுத்தூர்

4. நிறுவனங்களும் மற்றவைகளும்:

(அ) சூளூர் விமான நிலையம்

(ஆ) போதனூர் இரயில்வே நிலையம்

(இ) மருதமலை கோயில்

(ஈ) பாரதியார் பல்கலைக் கழகம்

(உ) வேளாண்மை பல்கலைக் கழகம்

(ஊ) கோவை கூட்டுறவு பால் பண்ணை

(எ) வழியோர ஊராட்சிகள் (65 குடியிருப்புகள்).

1996 மார்ச் 1] [திரு. டி. எம். செல்வகணபதி]

இத்திட்டம், நாளொன்றுக்கு 101.36 மில்லியன் லிட்டர் நீரை 12.47 இலட்சம் மக்கள் பயனடையும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

கவன ஈர்ப்பு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள, பகுதிகளுக்கு வடிவமைக்கப்பட்ட, தற்பொழுது வழங்கப்பட்டு வரும் குடிநீரின் அளவு மற்றும் பாதிக்கப்பட்டுள்ள பகிர்மான குழாய்களின் நீளம், இவை அடங்கிய அட்டவணை கீழே தரப்பட்டுள்ளது:—

பெயர்.	மதிப்பீட்டின் படி விநியோக குழாய்கள் பதிக்கப்பட வேண்டிய நீளம். கி.மீ.	தற்போது பதிக்கப் பட்டுள்ள நீளம். கி.மீ.	மதிப்பீட்டிற்கு மேல் அதிகப்படியாக பதிக்கப்பட்ட நீளம். கி.மீ.	மதிப்பீட்டின்படி ஒதுக்கப் பட்டுள்ள குடிநீரின் அளவு. (மில்லியன்	தற்போது வழங்கி வரும் குடிநீரின் அளவு. லிட்டரில்.)	பொது குழாய் களின் எண்ணிக்கை.
1. சுந்தராபுரம் 2. எல்.ஐ.சி. காலனி 3. ஆத்துப்பாலம் 4. ஈச்சநாரி 5. போத்தனூர்	24.544	56.50	31.95	38.164	32.00	512
6. குனியமுத்தூர் 7. சுண்டக்கா முத்தூர் 8. பி.கே.புதூர் 9. சுகுணாபுரம் 10. இடையார் பாளையம்	17.818	35.193	17.193	22.498	21.00	280

மேற்கண்ட அட்டவணையிலிருந்து குறிப்பிட்டபடி மதிப்பீட்டில் குறிப்பிட்ட அளவை விட அதிகப்படியான நீளத்திற்கு குழாய்கள் பதிக்கப்பட்டுள்ளது விளங்கும்.

மேலும் உந்தப்பட்டு வரும் குடிநீர் அளவு வறட்சியின் காரணமாக முறை வைத்து வழங்கப்பட்டு வருகிறது.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

மேலும் 23-2-96 அன்று 500 மி.மீ விட்டமுள்ள வார்ப்பிரும்பு குழாய் உடைப்பு ஏற்பட்டதனால் பயன்பெறும் ஊராட்சிக்கு மாற்று ஏற்பாடு செய்யப்பட்டது. மேற்படி உடைப்பு 25-2-96 அன்று சரிசெய்யப்பட்டது. பின் சிறிது சிறிதாக அந்தக் குழாயில் நீரேற்றி 15 மணி நேரத்திற்கு பிறகு மற்ற பயன்பெறும் ஊராட்சிகளுக்கும் குடிநீர் விநியோகிக்கப்பட்டது. பின்னர் இக்குழாய் இணைப்பில் கசிவு ஏற்பட்டதைக் கவனித்து அதை முழுமையாக அடைக்கப்பட்டு 27-2-96 அன்று முதல் குடிநீர் விநியோகம் தொடரப்பட்டு வருகிறது.

திரு. கே.பி. ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையைப் படித்தேன். வீரநடை போடும் வெற்றி வீராங்கனை எங்கள் இதய தெய்வம் ஆட்சியில், பேரூர் தொகுதியிலுள்ள குறிச்சிப் பஞ்சாயத்து, குனியமுத்தூர் பஞ்சாயத்து ஆகிய பகுதிகளில் பல கோடி ரூபாய் திட்டத்தின்கீழ் பள்ளிக்கூடங்கள், குடிநீர், கழிவுநீர், குடியிருப்பு, மின்விளக்கு வசதிகள், ரோடுகள், சிமெண்ட் ரோடுகள், கழிப்பிட வசதிகள், பட்டாக்கள், ஆதிதிராவிட குடியிருப்புகள் போன்ற பல்வேறு நலத் திட்டங்களை இந்த 4½ ஆண்டுகளில் எங்களுடைய இதய தெய்வம் அந்தப் பேரூர் தொகுதி மக்களுக்கு செய்து தந்திருக்கிறார்கள். அதை அந்தத் தொகுதி மக்களும் அறிவார்கள். மேலும் பேரூர் தொகுதியில் 20 கோடி செலவில் துணை மின் திட்டம், பலகோடி செலவில் தொழிற்பேட்டை போன்ற நலத் திட்டங்களையெல்லாம் எங்களுடைய புரட்சி தலைவி அவர்கள் பேரூர் தொகுதிக்கு அளித்துள்ளார்கள். அப்படியிருக்க, கடந்த 4 ஆண்டுகளில் எந்தக் குறையும் சொல்ல முடியாத அளவிற்கு நிர்வாகத் திறமை கொண்ட இந்த ஆட்சியின்மீது களங்கம் ஏற்படுத்தும் வகையில் சிறுவாணிக் குடிநீருக்கு பஞ்சாயத்திலிருந்து பணம் கொடுக்காததால்தான் சிறுவாணி குடிநீரை நிறுத்திவிட்டார்கள் என்று ஒரு சில எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்கள் அப்பாவி மக்களிடம் சொல்லி போராட்டத்தைத் தூண்டிவிட்டிருக்கிறார்கள் என்பதை இந்த அரசு அறியுமா?

பிற்பகல் 12.20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்னொரு கேள்வி கிடையாது. ஒரு கேள்வி தான்.

திரு. கே.பி. ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதேபோல கோவை மாநகருக்கு தற்போது அத்திக்கடவு குடிநீர் விநியோகம் செய்யப்படுகிற காரணத்தினாலும் குறிச்சி சுந்தராபுரம், போத்தனூர், கோணவாய்க்கால்பாளையம், மேட்டூர், ஆத்துப்பாலம்,

1996 மார்ச் 1] [திரு. கே.பி. ராஜு]

ஈச்சநாரி, மாறம்பாளையம் மற்றும் குனியமுத்தூர் பேரூராட்சிக்குட்பட்ட குனியமுத்தூர், அண்ணா நகர், இடையார்பாளையம், பி.கே. புதூர், சுண்டக்காமுத்தூர், கோவை புதூர், ராமசெட்டிபாளையம், குளத்துப்பாளையம், சுகுணாபுரம், நரசிபுரம் போன்ற பகுதிகளுக்கு இப்போது அளிக்கின்ற குடிநீரை அளவு அதிகப்படுத்த முடியுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறிச்சி குனியமுத்தூர் பகுதிகளுக்கு சிறுவாணித் தண்ணீர் விநியோகிக்க தண்ணீர் குழாய்கள் இன்றைக்கு அரை மீட்டர் விட்டமுள்ள வார்ப்பு இரும்பு குழாய்கள் பயன்படுத்தப்படுகின்றன. இந்த சிறுவாணிக் குடிநீர் திட்டம் 1977-லேயே தொடங்கப்பட்டு 1982-ல் முடிக்கப்பட்டது. இந்தத் திட்டமும் 1982-லேயே பயனுக்கு கொண்டு வரப்பட்டது. கடந்த 22-2-96 அன்று ஆலாந்துறை அருகே இந்தத் தண்ணீர் விநியோக குழாயில் எதிர்பாராத காற்று அடைப்பு அழுத்தத்தினால் குழாயில் விரிசல் ஏற்பட்டு தண்ணீர் கசியத் தொடங்கி பின்னர் குடிநீர் குழாயில் வெடிப்பு ஏற்பட்டிருக்கிறது. இந்த வெடிப்பை சரி செய்வதற்காக போர்க்கால அடிப்படையில் அனைத்து முயற்சிகளும் எடுக்கப்பட்டது. எனவே, 23-2-96-ம் நாள் அன்று தண்ணீர் விநியோகத்தை இந்தப் பகுதிகளுக்கு முழுமையாக நிறுத்தினாலொழிய அந்தக் குழாய் உடைப்பை சரி செய்ய இயலாத நிலையில் அவ்வாறு தண்ணீர் விநியோகம் நிறுத்தப்பட்டது. பிறகு உடைந்த குழாய்களை முற்றிலுமாக இரவு பகலாக தோண்டி வெளியே எடுத்து அதற்குப் பதிலாக புதிய மாற்றுக் குழாய்கள் பொருத்தப்பட்டு மீண்டும் தண்ணீர் ஏற்றுவதற்கு சுமார் 15 மணி நேரம் எடுத்துக்கொண்டு இன்றைக்கு 15 மணி நேரத்திற்கு பிறகு அந்தக் குடிநீர் அங்கே இருக்கிற மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியில் ஏற்றப்பட்டிருக்கிறது. இந்தப் பணிகள் அனைத்தும் முடிந்து கோவை புதூரிலுள்ள நிரப்புத் தொட்டியில் 27-2-96 அன்று இரவு 9.15 மணிக்குத் தான் நிரப்பு தொட்டிக்கு அந்தக் குடிநீர் வந்து சேர்ந்தது. அதன் பிறகு ஒவ்வொரு பகுதிக்கும் முறை வைத்து 'ஆன் டெர்ம் பேசிஸ்' என்று சொல்கிற அளவில் 27-2-96 இரவு குடிநீர் விநியோகிக்கப்பட்டது. 29-2-96 இரவு 9 மணிக்கு குறிச்சி பேரூராட்சியிலுள்ள கோண வாய்க்கால் பகுதியைத் தவிர இதர பகுதிகளுக்கு அனைத்திற்கும் குடிநீர் விநியோகம் ஒரு சுற்று முழுமையாக விநியோகம் செய்யப்பட்டுவிட்டது. தொடர்ந்து இரவு 10.30 மணி முதல் கோணவாய்க்கால் பாளையத்திற்கும் குடிநீர் விநியோகம் முழுமையாக செய்யப்பட்டுவிட்டது. லாரிகள் மூலமாக மாவட்ட ஆட்சித் தலைவர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய அலுவலர்கள் மற்றும் உதவி

பேரூராட்சி அலுவலர் ஆகியோர் மூலமாக ஏற்பாடு செய்யப்பட்டது. லாரி சப்ளையை பொது மக்கள் ஏற்கவில்லை. காரணம் அங்கே இருக்கிற மக்கள் சிறுவாணித் தண்ணீர் மட்டுமே வேண்டுமென்ற கோரிக்கை கொடுத்திருப்பதன் மூலம் சிறுவாணித் தண்ணீரைத் தவிர வேறு குடிநீர் தேவையில்லை என்று சொல்லிக் கொண்டிருப்பதாலும் இன்றைக்கு ஒவ்வொரு பகுதியாகவே சிறுவாணித் தண்ணீர் கொடுக்க வேண்டிய கட்டாய சூழ்நிலையில்தான் இன்றும் குறிச்சிப் பகுதியில் ஒரு சில இடங்களில் பஸ் மறியல் ஏற்பட்டிருக்கிறது. தற்போது முழுமையாக குடிநீர் விநியோகம் ஒரு முறை செய்யப்பட்டுவிட்டது. ஒரே நேரத்திலே அனைத்துப் பகுதிகளுக்கும் குடிநீர் விநியோகம் செய்ய இயலாத சூழ்நிலையில் தண்ணீர் அனுப்புவதற்கு காலதாமதமான பகுதிகளில் ஓரிரு இடங்களில் போராட்டங்கள் நடைபெற்றிருக்கின்றன. தண்ணீர் விநியோகம் முடிந்ததும் இந்தப் போராட்டங்கள் விலக்கிக் கொள்ளப்பட்டிருக்கிறது. இதில் அரசியல் ஆதாயம் தேட முற்பட்டவர்கள் கைங்கரியமும் நிறைய இருந்திருக்கிறது என்பதை இந்தப் பேரவைக்கு எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இன்றைக்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்தப் பேரூராட்சியிலே குடிநீர் பராமரிப்பிற்காகச் செலுத்தப்பட வேண்டிய தொகையை செலுத்தாதக் காரணத்தினாலே தான் இது நிறுத்தி வைக்கப்பட்டதாக அங்கே ஏதோ வதந்திகள் நிலவுவதாகவும் புகார் தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்குச் செலுத்த வேண்டியத் தொகையை பேரூராட்சிகள் செலுத்தாமல் இருந்தது உண்மை தான் ஆனால் இன்றைக்கு அதைக் காரணமாக வைத்து எந்தப் பகுதியிலும் குடிநீர் விநியோகம் நிறுத்தப்படவில்லை.

பிற்பகல் 12.25

இன்றைக்கு குனியமுத்தூர் மற்றும் அந்த குறிச்சி பேரூராட்சியிலே வளர்ச்சிப் பணிகள் மட்டும் பல கோடி ரூபாய்க்கு நடைபெற்றிருக்கிறது. கடந்த *4* ஆண்டுக் காலத்திலே, இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிக் காலத்திலே குறிச்சி பேரூராட்சியிலே மட்டும் ரூபாய் *1* கோடியே, *73* லட்சத்திற்கு வடிகால் வேலைகள், சாலை வேலைகள், சிறு பால வேலைகள், குடிநீர் வினியோக வேலைகள், தெரு விளக்குகள் அங்கே செய்து கொடுக்கப்பட்டிருக்கிறது. அதுபோல, குனியமுத்தூர் பேரூராட்சியிலே சுமார் *890* பணிகள் *1* கோடியே, *91* லட்சத்து, *28* ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டிலே சாலை, வடிகால், சிறு பாலங்கள் மற்றும் கழிப்பிடங்கள், தெரு விளக்கு வசதிகள் அங்கே செய்யப்பட்டிருக்கிறது.

1996 மார்ச் 1] [திரு. டி. எம். செல்வகணபதி]

ஆகவே, குடிநீர் பராமரிப்புக்காக தொகை செலுத்தவில்லை, அந்தக் காரணத்தினாலே அங்கே குடிநீர் நிறுத்தப்பட்டது என்பதை முற்றிலுமாக இந்தத் துறை மறுக்கிறது. 4 நாட்களுக்கு முன்னால் ஆலந்துறையிலே அரை மீட்டர் விட்டம் உள்ள குடிநீர் பைப் வெடித்துவிட்ட காரணத்தினாலே தான் அங்கே குடிநீர் தடைபட்டது. தற்போது சரி செய்யப்பட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஈ) காமராசர் மாவட்டம் ஸ்ரீவில்லிப்புத்தூர் தொகுதியின் சில பகுதிகளில் வீடில்லாத அரிசன மக்களுக்கு நிலம் வழங்குதல் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்த கவன ஈர்ப்பு, திரு. இரா. தாமரைக்கனி அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு ஆதிதிராவிட நலத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. இரா. தாமரைக்கனி.

திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"காமராசர் மாவட்டம், ஸ்ரீவில்லிப்புத்தூர் தொகுதி, இராஜகோபாலபுரம், என். திருவேங்கடபுரம், காளியம்மன் கோவில் தெரு, பதச்சேரி பிள்ளையார் நத்தம், வத்திராயிருப்பு, நொண்டியம்மன் கோவில் தெரு ஆகிய பகுதிகளில் வீடு இல்லாத அரிசன மக்களுக்கு நிலச்சுவான்தார்கள் நிலம் கொடுக்க முன்வந்தும், அதிகாரிகள் தாமதம் செய்வதால் ஏற்படும் நிலை குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

*மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது:

அறிக்கை

காமராசர் மாவட்டம், ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி இராசகோபாலபுரம், திருவேங்கடபுரம், வத்திராயிருப்பு நொண்டியம்மன் கோவில் தெரு, பிள்ளையார் நத்தம் ஆகிய பகுதிகளில் வீடுகளில்லாத அரிசன மக்களுக்கு இலவச வீட்டுமனை வழங்க எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகளின் விவரங்கள் பின்வருமாறு: